எம்.சி.ஓபி.எண் : 123/2024 தேதி: 29.01.2026

மசா : 2

பெயர் : Nurlla shref

த/பெயர் : kafar shref

வயது : 63

**மனுதாரர் தரப்பில் சாட்சி 2 இன் முதல் விசாரணை**

எனது பிரமாண வாக்கு மூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது தரப்பு சான்று ஆவணம் மசாஆ20

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்பொழுது sherif security இல் security ஆக பணிபுரிந்து வருகிறேன். நான் அங்கு தான் பணிசெய்கிறேன் என்பதற்கு என்ன ஆதாரம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் மசாஆ 20 எனது அடையாள அட்டையை தாக்கல் செய்துள்ளேன். அங்கு 4 வருட காலமாக பணியில் உள்ளேன். எனது பணிநேரமானது காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை ஆகும். விபத்தானது 18.04.2023 இல் காலை 9.30 மணியளவில் நடந்தது. நான் விபத்தை நேரில் பார்த்தேன். நான் விபத்தை பார்க்கும் போது நான் ஒருவர் தான் பார்த்தேன். அதன் பின்பு 10 பேர் வந்தார்கள். விபத்து நடந்தவுடன் நான் விபத்து ஏற்படுத்திய வேனின் எண்ணை பார்த்தேன். சின்ன வண்டியின் எண்ணை பார்க்கவில்லை. அங்கு இருந்த போக்குவரத்து காவலர்கள் என்னை விசாரித்தார்கள். அவர்கள் விசாரித்தபோது விபத்தை பார்த்தேன் என்று கூறினேன். சின்ன வண்டி ஓட்டியவர் தலைக்கவசம் அணிந்திருந்தார். விபத்தில் அடிபட்ட நபருக்கு முதல் உதவி ஏதேனும் செய்தேனா என்றால் இல்லை விபத்தை பார்த்தேன். விபத்து நடந்த அன்று 9.30 மணிக்கு நான் பணிக்கு சென்று விட்டேனா என்றால் ஆமாம். எனக்கு இந்த விபத்தை பற்றி எனக்கு ஏதும் தெரியாது என்றாலும் நான் ஜோடிக்கப்பட்ட சாட்சி என்றாலும் சரியல்ல. நான் விபத்தை நேரடியாக பார்த்தேன். விபத்து சமயத்தில் சின்ன வாகனத்தில் வந்தவர் தலைக்கவசம் அணிந்ததை நான் பார்த்தேன்.

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை.**

புகார் நான் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அடிபட்ட நபரை நான் மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை. அடிபட்ட நபரை எவ்வாறு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்பதை நான் பார்க்கவில்லை. நான் எனது நிறுவனத்திற்கு சென்றுவிட்டேன். விபத்து நடந்த நான் நின்ற இடத்தில் இருந்து சுமார் ஒரு 5 அட தூாரம் இருந்தது. அந்த சாலையில்

பொதுவாக போக்குவரத்து அதிகமாக இருக்கும் என்றால் சரிதான். ஆனால் 10 மணிக்கு மேல் தான் போக்குவரத்து அதிகமாக இருக்கும். என்னிடம் காட்டப்படும் மசாஆ2 இந்த விபத்தானது சாலையில் நடுவில் ஏற்பட்டதாக காணப்பட்டது என்றால் சாலையில் நடுவில் காணப்பவில்லை சாலையின் ஓரத்தில் இருந்து 5 அடி தள்ளிதான் நடந்துள்ளது. அடிபட்ட நபருக்கு நான் ஆம்புலன்ஸ் ஏதும் அழைக்கவில்லை. அடிபட்ட நபர் ஓட்டிசென்ற வாகனம் ஆக்டிவா ஆகும் . அதன் பதிவு எண் எனக்கு தெரியாது. அவர் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. கருப்பு நிற கவசம் அணிந்திருந்தார். நான் மேற்படி விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் சத்தம் கேட்டு பார்த்தேன் என்றாலும் அதை பற்றிய முழு விவரம் எனக்கு நேரடியாக தெரியவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி சாலையில் அதிக வாகனம் செல்லும் நேரம் என்பதால் நான் மேற்படி விபத்தை நேரடியாக பார்த்திருக்க வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல. இந்த விபத்தை நான் பார்த்திருந்தால் நான் புகார் கொடுத்திருப்பேன் அல்லது அடிபட்ட நபரை மருத்துவமனையில் சேர்த்திருப்பேன் என்றாலும் நான் பாாக்காத காரணத்தினால் தான் இவைகளை நான் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.